" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** **" ஈன்ற பொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய் "**

**பொருள் :** **தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிடப் பெரிது மகிழ்வாள்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு</u>**
**<u>நன்றி தெரிவிக்கும் தீர்மானம்</u>**

### <u>தீர்மானம் 1</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் தொலைநோக்குத் திட்டங்களின்மூலம் தமிழ்நாட்டை வளமான தமிழகமாக உயர்த்தி இந்தியாவின் முதல் மாநிலமாக்கிட நல்லபல திட்டங்களை செயல்படுத்தி வருவதை நாடறியும்.

நாட்டின் வாழ்வும் வளமும் இளைஞர்கள் வளர்ச்சியில்தான் உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் **அம்மா** அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 15 மாதங்களில், படித்து பட்டங்களைப் பெற்று வேலையின்றித் தவித்துவந்த 1 லட்சத்து 75 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி, இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்க்கைக்கு

அடித்தளம் அமைத்துக் கொடுத்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்த வரலாற்றுச் சாதனை படைத்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.225**

**(ஒம்..) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.08.2012**

## தீர்மானம் 2

ஆட்சியில் இருக்கும்போது இலங்கைத் தமிழர்கள் அழிவிற்கு காரணமாக இருந்துவிட்டு, ஆட்சியில் இல்லாதபோது இலங்கைத் தமிழகர்களின் உரிமைப் பாதுகாப்பு என்ற போர்வையில் முதலைக் கண்ணீர் வடிக்கும் கருணாநிதியை இக்கூட்டம் கண்டிப்பதோடு, இலங்கைத் தமிழர்களுக்காக தொடர்ந்து போராடியும் இலங்கை ராணுவத்திற்கு ராணுவ பயிற்சி அளிக்ககூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களை இம்மாமன்றக் கூட்டம் மனதார பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.226**

**(ஒம்..) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.08.2012**

## இரங்கல் தீர்மானம்

மதுரை மாநகராட்சி பழைய வார்டு 31, (புதிய வார்டு 83) முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு.இரா.கேசவன், என்பவர் கடந்த 04.08.2012-ஆம் தேதி மரணம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவினால் துயரப்படும் இவரது குடும்பத்தாருக்கு இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.227**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.08.2012**

1) **CW3/13195/2011**

அகில இந்திய மேயர்கள் கவுன்சில் என்ற அமைப்பின் தலைவர் அவர்களின் (கடிதம் எண்.5108 நாள்:16.04.2012) கடிதத்தில் புது டெல்லியில் அமைந்துள்ள அகில இந்திய மேயர்களின் கவுன்சிலில் அனைத்து மாநில மாநகராட்சி மேயர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து வருடந்தோறும் சந்தா தொகை செலுத்தப்பட்டு வருவதாகவும், அதுபோல் மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் அகில இந்திய மேயர்களின் கவுன்சிலில் உறுப்பினராக இருப்பதால் 2010-2011-ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.10,000/-ம் 2011-2012-ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/-ம் மற்றும் 2012-2013 ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/–ம் ஆக மொத்தம் ரூ.50,000/-த்தை செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.10 கோடிக்கு மேல் இருப்பதால் அகில இந்திய மேயர்களின் கவுன்சிலால் வரையறுக்கப்பட்டுள்ள 2010-2011–ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.10,000/–ம் 2011-2012-ம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/-ம் மற்றும் 2012-2013 ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.20,000/-ம் ஆக மொத்தம் ரூ.**50,000**/-த்தை (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அகில இந்திய மேயர்களின் கவுன்சிலிற்கு, செலுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :** அகில இந்திய மேயர்களின் கவுன்சில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.228**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) CW1/17916/2012**

அரசாணை (நிலை) எண்:220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:28.9.2010–ன் படி மதுரை மாநகராட்சியை விரிவாக்கம் செய்து உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து 100 வார்டுகளாக நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

மேற்கண்ட ஆணையின்படி 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதில் மண்டலம் எண்–1–ல் இணைக்கப்பட்டுள்ள வார்டு–8 விளாங்குடி என்ற பெயரை மேலவைத்தியநாதபுரம் என பெயர் மாற்றம் செய்யவும், வார்டு-23 விசாலாட்சிநகர் என உள்ளதை விளாங்குடி என பெயர் மாற்றம் செய்யவும் அரசின் அனுமதி பெறுவது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.229**

**அரசின் அனுமதி பெற்ற பின்பு பெயர் மாற்றம் செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3) ம.பொ.4/19876/12**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.1, வார்டு எண்.20, பி.பி.சாவடி பகுதியில் சந்தன மாரியம்மன் கோவில் தெரு புல எண்.44/1-ல் (வார்டு எண்.24 பிளாக் 26) மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான 5.17 சென்ட் பரப்பளவு மனையிடத்தில் (மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்) மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு, பொதுப்பணித்துறை மூலம் ரூ.12.75 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு சட்டமன்ற பேரவைத் செயலாணை (வாலாயம்) எண்.439, நாள் : 06.06.2012-ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரப்படி புல எண் 44/1-ல் 5.17 சென்ட் (2252.60சதுரஅடி) இடத்தில் மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு பொதுப்பணித்துறை மூலம் அலுவலக கட்டிடம் மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டுவதற்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.230**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ.1/38572/2011**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலை விபத்துகள் மற்றும் பேறு காலம் தொடர்பாக அவசர சிகிச்சைகள் பெற அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் போதிய அளவு இருந்தாலும் அவசர சிகிச்சைக்கு உரிய நேரத்தில் நோயாளிகளை அனுமதித்திட போதிய ஆம்புலன்ஸ் வாகன வசதிகள் மதுரை மாநகராட்சியில் இல்லை. இதனை கருத்திற்கொண்டு அவசரப்பணிகளை திறம்பட செய்வதற்கு, மதுரை மாநகராட்சியில் ஒரு மண்டலத்திற்கு தலா ஒரு ஆம்புலன்ஸ் DGS & D அடிப்படையில் ரூ.8,54,734/- (எட்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து எழுநூற்றி முப்பத்து நான்கு) வீதம் 4 ஆம்புலன்ஸ்கள் ரூ.34,18,936/-(முப்பத்துநான்கு லட்சத்து பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறு) வாங்குவதற்கு அரசின் ஒப்புதலுக்கும் நிதி உதவி கோரியும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.231**

**DGS -2D அடிப்படையில் 4 ஆம்புலன்ஸ்கள் வாங்குவதற்கு அரசின் ஒப்புதலுக்கும், நிதி உதவி கோரியும் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) மநு2/006909/12**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் பைகள், கேரி பேக்குகள், பிளாஸ்டிக் டீ கப்புகள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் உபயோகப்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படுவதால் கழிவுநீர் வாயக்கால்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகளில் குப்பைகளாக தேங்கி சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றது. சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு 40 மைக்ரான் அளவிற்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்ததுதல் ஆகியவற்றை 2012 செப்டம்பர் 1-ம் தேதி (01.09.2012) முதல் மாநகராட்சி பகுதிகளில் தடை செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் உடனடியாக பறிமுதல் செய்யவும், தடையினை மீறி விற்பனை செய்தாலோ மற்றும் பயன்படுத்தினாலோ, மேற்படி பொருட்களை பறிமுதல் செய்வதுடன் கீழ்க்கண்ட

விபரப்படி நிர்ணயம் செய்த அபராத கட்டணம் வசூல் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**ஒரு முறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் (40 மைக்ரான் அளவிற்கு கீழ்)**

| | | | |
|---|---|---|---|
| 1 | மொத்த விற்பனை | பறிமுதல் செய்வதுடன் நிர்வாக செலவினக் கட்டணம் | ரூ.500/- |
| 2 | சில்லரை விற்பனை | பறிமுதல் செய்வதுடன் நிர்வாக செலவினக் கட்டணம் | ரூ.200/- |
| 3 | உபயோகிப்பாளர்கள் | பறிமுதல் செய்வதுடன் நிர்வாக செலவினக் கட்டணம் | ரூ.100/- |

பொருட்கள் விற்பனை செய்யும் பொழுது 40 மைக்ரான் அளவிற்கு குறைவான கேரி பேக்குகள் கடைகளில் இலவசமாக கொடுக்கக்கூடாது. மாநகராட்சி பகுதிகளில் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினை கட்டுப்படுத்துவதற்காக கீழ்க்கண்டவாறு பிளாஸ்டிக் பைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| சிறிய அளவிலான பைகள் (12 x 14 அங்குலம்) | ஒன்றுக்கு ரூ. 1/- |
| நடுத்தர அளவிலான பைகள் (16 x 20 அங்குலம்) | ஒன்றுக்கு ரூ.2/- |
| பெரிய அளவிலான பைகள் (22 x 30 அங்குலம்) | ஒன்றுக்கு ரூ.4/- |

மாநகராட்சி எல்லைக்குள் உள்ள குடியிருப்புகள், அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள், உணவு விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்களிலிருந்து தன்னிச்சையாக தெருக்களில் குப்பைகளை கொட்டுவதற்கு கீழ்க்கண்ட விபரப்படி அபாரதக் கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | குடியிருப்பு வீடுகளுக்கு | ஒவ்வொரு முறையும் | ரூ.100/- |
| 2 | அலுவலங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு | ஒவ்வொரு முறையும் | ரூ.200/- |
| 3 | உணவுவிடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் ( சிறியது ) | ஒவ்வொரு முறையும் | ரூ.500/- |
| 4 | உணவுவிடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் ( பெரியது ) | ஒவ்வொரு முறையும் | ரூ.1000/- |

**மாமன்றத்தீர்மானம் எண்.232**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

6) **ம.பொ.4/22817/12**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் நிகழ்ச்சிகளுக்கு அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் லாரிமூலம் குடிநீர் சப்ளை செய்ய நடை ஒன்றுக்கு பொழுது ரூ.462/- ஒரு நடைக்கு என வசூல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது டீசல் விலை ஏற்றம் மற்றும் குடிநீர் சப்ளை தொலைவு தூரம் ஆகியவைகளின் கணக்கில் கொண்டு புதிய கணக்கீட்டின்படி ரூ.570/- ஆகிறது. எனவே இனிவரும் காலங்களில் தனியார் நிகழ்ச்சிகளுக்கு அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் மாநகராட்சி எல்கைக்குள் லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்யப்படும் பொழுது நடை ஒன்றுக்கு ரூ.570/- வசூல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.233**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **H3 / 10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களை வேலை வாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 60 நபர்கள் மட்டும் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 09.07.2012–ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 11.07.2012 முதல் 89 நாட்களுக்கு மட்டும் பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.234**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) கி.ம.நி.3/3820/2012**

மதுரை மாநகராட்சியில் மண்டலம் எண்.3-ல் (கிழக்கு மண்டலம்) பொறியியல் பிரிவில் உதவிப்பொறியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.ஜே.மல்லிகா அவர்கள் 4-6-2001 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார். அன்னாரின் பயிற்சி காலம் 3-6-2003 பி.ப. முதல் முடிவடைந்துள்ளதாலும், அன்னாரின் மீது குற்றச்சாட்டு மற்றும் தண்டனை ஏதும் நிலுவையில் இல்லாததாலும் 4-6-2001 மு.ப. முதல் பணியினை வரன்முறைப்படுத்தியும் 3-6-2003 பி.ப. முதல் தகுதிகாண் பருவகாலம் முடித்ததாக அறிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு** : செக் சிலிப் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.235**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ.1/000478/12**

மதுரை மாநகராட்சி மையபொறியியல்பிரிவு கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco –Chennai, The Governmemt of Tamilnadu Undertaking ) பணியாளர்கள் கீழ் கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1) | காவலர்கள் (Security Guard ) | - 19 நபர்கள் |
| 2) | ஓட்டுநர்கள் (Driver) | - 12 நபர்கள் |
| 3) | மெக்கானிக் (Mechanic) | - 13 நபர்கள் |
| 4) | தலைமை காவலர்கள் | - 2 நபர்கள் |
| | **மொத்த பணியாளர்கள்** | = 46 நபர்கள் |

அரசு ஆணை எண்.G.O(M.S)456, நாள் : 17.05.2012–ல் Public (Ex-servicemen) Department TEXCO அடிப்படையில் பணியாளர்களுக்கு 10% ஊதிய உயர்வு கீழ்க்கண்டவாறு (01.06.2012) ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண். | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம் | 01.06.12 முதல் வழங்க வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| 1 | காவலர் | 7690 | 8906 |
| 2 | மெக்கானிக் | 8905 | 10241 |
| 3 | ஓட்டுநர் | 8905 | 10241 |
| 4 | தலைமை காவலர் | 8905 | 10241 |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவை கட்டணம் 12% சேவை வரி 10% கல்வி வரி 2% உயர்நிலை பள்ளி கல்வி வரி 1% வழங்க வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.236**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10)ம.பொ.1/21097/2012**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான வாகன பராமரிப்பு நிலையத்தில் 300–க்கும் மேற்பட்ட வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாகனங்கள் கொள்முதல் செய்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய வாகனங்களை பராமரிக்க ஆகும் செலவு அதன் மதிப்பீட்டை காட்டிலும் செலவினம் அதிகமாக உள்ளது. இவ்வாகனங்களின் எண் வாங்கப்பட்ட வருடம் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வாகன எண். | வாகனத்தின் பெயர் | வாங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | TN 59 G 0186 | டிப்பர் லாரி | 1994 |
| 2 | TN 59 G 0187 | டிப்பர் லாரி | 1994 |
| 3 | TN 59 G 0188 | டிப்பர் லாரி | 1994 |
| 4 | TN 59 G 0189 | டிப்பர் லாரி | 1994 |
| 5 | TN 59 D 0202 | டிப்பர் லாரி | 1994 |
| 6 | TN 59 D 0205 | டிப்பர் லாரி | 1994 |
| 7 | TN 59 D 0402 | டிப்பர் லாரி | 1993 |
| 8 | TN 59 D 0339 | டிப்பர் லாரி | 1993 |
| 9 | TN 59 D 0400 | டிப்பர் லாரி | 1993 |
| 10 | TN 59 D 0204 | டிப்பர் லாரி | 1994 |
| 11 | TN 59 2952 | குடிநீர் லாரி | 1989 |
| 12 | TN 59 3338 | குடிநீர் லாரி | 1989 |
| 13 | TNA 2941 | ஜீப் | 1978 |
| 14 | TNA 2940 | ஜீப் | 1978 |
| 15 | TN 59 3095 | ஜீப் | 1990 |
| 16 | TAZ 1883 | ஸ்கைலிப்ட் | 1989 |
| 17 | TNA 6000 | டிராக்டர் | 1993 |
| 18 | TN 59 7007 | டிராக்டர் | 1993 |
| 19 | TN 59 L 2738 | டம்பர் பிளேசர் | 1998 |
| 20 | TN 59 L 2739 | டம்பர் பிளேசர் | 1998 |
| 21 | TN 59 1743 | ஸ்வராஜ்மஸ்தா | 1989 |
| 22 | TN 59 1744 | ஸ்வராஜ்மஸ்தா | 1989 |
| 23 | TN 59 B 8523 | டாப்லாரி | 1992 |

மேற்கண்ட வாகனங்கள் அரசு நிர்ணயித்த காலத்தைவிட கூடுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பழுதுகள் அதிகமாக ஏற்படுகிறது. எனவே மேற்காணும் 23 வாகனங்களை கழித்தல் செய்ய அரசு பணிமனையான (Government Workshop) Motor Vehicle Inspector மூலம் மதிப்பீடு பெற்று வாகனங்களை கழித்தல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.237</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**11)<u>ம.ந.1/022171/12</u>**

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனைகளுக்கு தேவையான சில்லரை செலவினங்களுக்கான ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நிரந்தர முன் பணம் கீழ்கண்டவாறு உயர்த்துவது மற்றும் மைய நகர்நலப்பிரிவிற்கு சில்லரை செலவினங்களுக்காக நிரந்தர முன்பணம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண். | மருத்துவமனை | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை | உயர்த்தப்படும் தொகை / அனுமதிக்கப்படும் தொகை |
|---|---|---|---|
| 1 | மகப்பேறுமனை (ஒவ்வொன்றுக்கும் தலா) | 1000 | 5000 |
| 2 | நலவாழ்வு மையங்கள் (ஒவ்வொன்றுக்கும் தலா) | 500 | 2000 |
| 3 | மருந்தகங்கள் (ஒவ்வொன்றுக்கும் தலா) | 500 | 2000 |
| 4 | பால்வாடி (Creech) (ஒவ்வொன்றுக்கும் தலா) | 500 | 2000 |
| 5 | மையநகர்நலப்பிரிவு | - | 5000 |

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.238</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**12) <u>ம.ந.1/015475/12</u>**

சிவகங்கை நகராட்சியில் பணிபுரிந்து வரும் திருமதி.S.மகாமணி, நகர சுகாதாார செவிலியர் அவரது குடும்ப சூழ்நிலை கருதி மதுரை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை இம்மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு :

1. மேற்கண்ட பணியாளர் இம்மாநகராட்சியில் ஒருவழிப் பணிமாறுதலில் வரும்பட்சத்தில் அவரை நகர சுகாதார செவிலியர் (UHN) பணியிடத்தில் கடைசி நபராக சேர்க்கப்படும்.
2. மேற்கண்ட பணியாளரை சிவகங்கை நகராட்சியிலிருந்து ஒருவழி பணிமாறுதலில் மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய சிவகங்கை நகராட்சியில் தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
3. மேற்கண்ட பணியாளரை ஒருவழி பணிமாறுதல் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையாளர் மூலமாக மனு பெறப்பட்டுள்ளது.
4. இப்பணிமாறுதலுக்கு பயணப்படி வழங்கப்படமாட்டாது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.239</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**13) <u>HF2/21706/12</u>**

மதுரை மாநகராட்சியில் நலவாழ்வு மையம் –10 வில்லாபுரம், மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.S.மேரி, நகர சுகாதார செவிலியர் அவரது குடும்ப சூழ்நிலைக் கருதி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு ஒரு வழிப் பணிமாறுதல் கோரியுள்ளதின் பேரில் அவரை ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு</u> :

1. அவரது சொந்த விருப்பத்தின் பேரில் மாறுதல் கோருவதால், பயணப்படி வழங்கப்பட மாட்டாது.
2. அரசு உத்தரவு பெறப்பட்ட பின்னர் பணிமாறுதல் செய்யப்படும்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.240</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.08.2012**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2012-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30-ம் நாள் வியாழக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) பொ.3/000229/10</u>**

மண்டலம் 1 வார்டு 14 கோமஸ்பாளையம் பகுதி (ஆரப்பாளையம் பஸ் நிலையம் பின்புறம்) சுமார் 96.30 சென்ட் மாநகராட்சி மனையானது சர்வே வார்டு 4 பிளாக் 26, T.S.No.4,5,6-ன்படி மதுரை மாநகராட்சி ஆணையாளர் பெயரில் இருந்து வருகிறது. இந்த இடத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக 220 குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு கடந்த 2001–ம் ஆண்டில் 220 குடியிருப்புகளுக்கு 10'X10' என்ற அளவில் அஸ்பெஸ்டாஸ் சீட் கூரையுடன் கூடிய வீடுகள் மாநகராட்சியின் தடையில்லா சான்று (NOC) கொடுக்கப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டது.

மேற்கண்ட அஸ்பெஸ்டாஸ் வீடுகள் சேதம் அடைந்து சுகாதார கேடாக இருந்த நிலையில் தற்போது JnNURM BSUP திட்டத்தின் கீழ் 13'3X10'0' என்ற அளவில் ஒவ்வொரு குடியிருப்போரும் (274 ச.அடி பரப்பளவில்) தரை தளம், முதல் தளம் ஆக வீடுகள் கட்டி கொள்ள மதுரை மாநகராட்சி மாமன்ற மூலம் தடையில்லா சான்று (NOC) கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. (மாமன்ற தீர்மான எண்.850 நாள்:22.01.2010) இந்த திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடு கட்டுமானம் செய்யப்பட்டவர்களுக்கு உரிய மானிய தொகை 3 தவணைகள் கொடுக்கப்பட்டுள்ளது. (நான்காவது தவணை வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பின்னர் தான் வழங்க இயலும்)

இந்த நிலையில் பயனாளிகள் தங்களது பங்களிப்பு தொகைக்கு மீதமுள்ள வேலைகளை செய்வதற்கு வங்கிகள் மூலம் கடன் பெற்று தந்தால் தான் வேலை செய்து முடிக்க முடியும் என கோரிக்கை வைக்கின்றனர். வங்கிகளில் கடன் பெறுவதற்கு கேட்ட போது இந்த இடம் பயனாளிகளின் பெயரில் பட்டா இருந்தால் தான் பணம் தர இயலும் என கூறுகின்றனர். மேலும் இந்த இடம் ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயரில் தான் உள்ளது.

எனவே ஒவ்வொரு குடியிருப்போரும் 25 ஆண்டுகளுக்கு மேலாக இதே இடத்தில் குடியிருந்து வருவதாலும், சர்வே வார்டு V பிளாக் 26, T.S.No.4, 5, 6 ல் 220 குடியிருப்போருக்கும் 13'3X10'0' அளவில் மனையிடம் வழங்க அரசின் அனுமதி பெற்று வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.241</u>**

**<u>அரசின் அனுமதி பெற்ற பின்பு வழங்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>2) ம.பொ.4/Est.670 / 12-13</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு 36 பனகல் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான முத்து வணிகவளாகம் உள்ளது. இவ்வளாகத்தின் தென்புறம் கடைகள் அமைந்துள்ளது. கடைகளுக்கு வடபுறம் 0.35 ஏக்கர் பரப்பளவில் காலியிடம் உள்ளது. இக்காலியிடத்தில் தரைதளத்தில் 6000 சதுர அடியில் 22 புதிய கடைகள் முறையே 154 சதுர அடியில் 11 எண்ணிக்கை, 162 சதுர அடியில் 7 எண்ணிக்கை, 446 சதுர அடியில் 2 எண்ணிக்கை, 487 சதுர அடியில் 1 எண்ணிக்கை மற்றும் 380 சதுர அடியில் 1 எண்ணிக்கையில் வணிகவளாகம் அமைக்க 2012-13 ஆண்டு விலைவிகிதத்தில் ரூ.95.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வேண்டியும், ஒப்பந்தபுள்ளி வரவழைக்கவும், மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.242</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>3) ம.பொ.4/ம.எண்.300 / 12-13</u>**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையின் பெயர் மற்றும் விபரங்கள் அடங்கிய இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைப்பதற்கு மதிப்பீடுகள் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வருமாறு :

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1. | **ம.பொ.4/ம.எண்.300/12-13**<br>மண்டலம் 2–க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 99.50 |
| 2. | **ம.பொ.4/ம.எண்.624/12-13**<br>மண்டலம் 3–க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 90.00 |
| 3. | **ம.பொ.3/ம.எண்.333/12-13**<br>மண்டலம் 1 க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 90.00 |
| 4. | **ம.பொ.4/ம.எண்.620/12-13**<br>மண்டலம் 4 க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 99.50 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.243</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 30 .08.2012**
**மதுரை.**

* * * * * * * *

# மதுரை மாநகராட்சி
## மாமன்றக் கூட்டம்
## Table Agenda

**1 ) கி.ம.பொ.1/006152/12**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.3 வார்டு எண்.70 காமராஜபுரம் ராம் தியேட்டர் காய்கறி மார்க்கெட் அருகில் சர்வே வார்டு எண் : 1, பிளாக் எண் : 66 T.S.No : 24 (பகுதி) மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 70 மற்றும் 69–வது வார்டுகளில் குடியிருக்கும் பொது மக்கள் பயன் பெறும் வகையில் 2038 சதுர அடியில் மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைத்திட மாமன்றத் தீர்மானம் எண்.393, நாள்:15.03.2007–ல் தீர்மானம் நிறைவேற்றி நிபந்தனைக்குட்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூ.300 வீதம் வாடகை நிர்ணயம் செய்து மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைக்கப்படும் பொழுது கூடுதலாக 889 சதுர அடி இடத்தை சேர்த்து மொத்தம் 2927 சதுர அடி இடத்தில் மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 2927 சதுரஅடி உள்ள பரப்பளவிற்கு மண்ணெண்ணெய் விநியோக மையம் அமைத்துக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு:** மேற்கண்ட இடத்திற்கான வாடகை மாமன்ற ஒப்புதல் பெற்ற பின் நிர்ணயம் செய்யப்படும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.244**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) ம.பொ. 4/ம.எண்.418/12-13**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட உள்வட்டச் சுற்றுச் சாலையில் உள்ள டோல்கேட் எண்.2 முதல் 5 வரையுள்ள டோல்கேட்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட டோல்கேட்டின் மேற்கூரையின் Structural steel Canopy அமைத்து அவற்றிற்கு Roofing மற்றும் False Ceiling அமைத்து பணிகள் மேற்கொள்ளும் வகையில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1. | **ம.பொ.4/ம.எண்.418/12-13** உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண்.2ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 |
| 2. | **ம.பொ.4/ம.எண்.441/12-13** உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண்.3ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 |
| 3. | **ம.பொ.3/ம.எண்.442/12-13** உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண்.4ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 |
| 4. | **ம.பொ.4/ம.எண்.623/12-13** உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண்.5ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 34.00 |

மேற்படி மதிப்பீட்டு பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.245**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ம.பொ.4/ம.எண்.559 / 12-13**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வார்டு பகுதிகளில் குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேற்கொள்ள தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் போது மேற்படி பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் முதற்கட்டமாக மேற்படி பகுதிகள் மற்றும் மாநகராட்சியின் பழைய வார்டுப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் தொட்டிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விபரம் பின்வறுமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1. | **ம.பொ.4/ம.எண்.559/12-13**<br>மண்டலம் 1 க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **38.50** |
| 2. | **ம.பொ.4/ம.எண்.560/12-13**<br>மண்டலம் 2 க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **59.50** |
| 3. | **ம.பொ.4/ம.எண்.561/12-13**<br>மண்டலம் 3 க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **38.50** |
| 4. | **ம.பொ.4/ம.எண்.562/12-13**<br>மண்டலம் 4 க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **59.50** |

தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மேற்படி மதிப்பீடுகளுக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.246**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ந.பொ. 1/17333/ 12**

மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியின் கீழ் மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, ஒரு குடியிருப்பின் பரப்பளவு 350 சதுர அடி என அளவிடப்பட்டுள்ளது. மேற்படி அடுக்குமாடி குடியிருப்பானது தரைத் தளத்துடன் இரண்டு மாடி கட்டிடமாக (GF + 2 Floor) அமைக்கப்பட உள்ளது. தரைத் தளத்தில் நான்கு (4) குடியிருப்புகள் வீதம் (GF + 2 Floor) ல் 12 குடியிருப்புகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| தரைத் தளத்தில் நான்கு குடியிருப்புகள் அமைப்பதற்கு தேவையான பரப்பளவு | 4 x 350 ச.அடி | - 1400 ச.அடி. |
| மாடிப்படி மற்றும் நடைபாதை பரப்பளவு | 12’x10 | – 120 ச.அடி. |
| | | – 1520 ச.அடி. |
| தரைத்தளம் மற்றும் இரண்டு மாடி கட்டுவதற்கு | 1520 ச.அடிx3 | – 4560 ச.அடி. |
| கட்டிடம் சுற்றி காலியிடம் | | – 480 ச.அடி. |
| **மொத்தம்** | | – 5040 ச.அடி. |
| **1 Block** (12 குடியிருப்புகள்) அடுக்குமாடி குடியிருப்பு அமைப்பதற்கான இடத்தின் பரப்பளவு | | - 5040 சதுரஅடி. |
| கட்டுமான தொகை உத்தேசமாக மூன்று தளங்கள் கட்டுவதற்கு (12 குடியிருப்புகள்) | | – ரூ.68.40 இலட்சம் |

| வ. எண். | வார்டு எண் | குடியிருப்பு கட்டுமிடம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | **1** | மண்டலம் எண்.1<br>IOC நகர் விரிவாக்கப்பகுதி (விளாங்குடி) | 120 குடியிருப்புகள் | 684.00 |
| 2. | **35** | மண்டலம் 2<br>மதிச்சியம் கிழக்குத் தெரு | 60 குடியிருப்புகள் | 342.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | **94** | மண்டலம் 3<br>MMC காலனி அருப்புக்கோட்டை மெயின் ரோடு | 120<br>குடியிருப்புகள் | 684.00 |
| 4. | **94** | மண்டலம் 4<br>MMC காலனி அருப்புக்கோட்டை மெயின் ரோடு | 120<br>குடியிருப்புகள் | 684.00 |

மேற்கண்டவாறு நான்கு மண்டலங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ள இடங்களில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தின் பரப்பளவிற்கு ஏற்றவாறு முதற்கட்டமாக அடுக்குமாடி குடியிருப்புகள் (G.F + 2 Floor) கட்டுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.247**

**அரசின் ஒப்புதலை பெற குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.08.2012**